Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.89**/2022**

Deposition of PW1 Witness for Defence

Defence Court

| | | | |
|---|---|---|---|
| Name | :தனபாக்கியம் | Calling | : |
| Husband Name | :ரவி | Village | : |
| Age | : | Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 27th day of August 2024.

**(A1 to A3 are present)**

குறுக்கு விசாரணை

ரவி எனது கணவர். அ.சா.4 எனது பெரிய மகன். நவீன் எனது இளைய மகன். அசோக் குமார் மற்றும் ஆனந்த் ராஜ் ஆகியோர் சகோதரர்கள். அசோக் குமார் மற்றும் ஆனந்த் ராஜ் எனது அக்கா நாகம்மாளின் மைத்துனரின் மகன்கள். சாட்சி ராமு எனது பக்கத்து வீட்டில் குடியிருந்து வரும் நபர். நவீன் குமாரும் அருண் குமாரும் நண்பர்கள் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு ராஜா மற்றும் ராமு ஆகியோரின் வீடுகளை தாண்டி தான் வரவேண்டும் என்றால் சரிதான். ராஜா மற்றும் ராமு ஆகியோரின் வீடுகளுக்கு எதிரே தட்சணாமூர்த்தி மற்றும் சங்கர் ஆகியோரின் வீடுகள் உள்ளது. எதிரி சதீஷ் அசோக்குமாரை கூப்பிட்டு சென்றார் என்பதை நிரூபிப்பதற்காக போலீசார் மேற்கூறிய நபர்களை விசாரித்தார்களா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது கணவரின் சொந்த ஊர் திருப்பெரும்புத்தூர் என்றால் சரிதான். எதிரி சதீஷின் மாமனாரின் சொந்த ஊர் திருவலாங்காடு என்றால் சரிதான். எனது கணவரும் சதீஷின் மாமனாரும் உறவினர்கள் என்றால் சரியல்ல. சதீஷின் மாமனார் எனது உறவினர். சதீஷின் மாமனார் எனது உறவினர் என்ற விவரத்தை நான போலீசாரிடம் கூறினேனா என்றால், பதற்றத்தில் நான் கூறினேனா என்று எனக்கு தற்போது நினைவில்லை. இதற்கு முன்னர் நான் அந்த விவரத்தை சொல்லவில்லை என்றும், ஞாபகமில்லை என்று நான் பொய்யாக சொல்கிறேன்

என்றும் சொன்னால் சரியல்ல. சதீஷின் மனைவி இறந்தது சம்மந்தமாக நானோ, இறந்த எனது மகனோ மற்ற குடும்ப உறுப்பினர்களோ புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. போலீசார் விசாரிக்கும் போது நான் அந்த விவரத்தை கூறினேனா என்றால் இல்லை. எனது குடும்பத்துக்கும் எதிரிகள் குடும்பத்துக்கும் எந்த உறவு முறையும் இல்லை என்றும், அரசு தரப்பு வழக்கை வலுப்படுத்துவதற்காக சுவிதாவை எனது உறவினர் என்று பொய்யாக கூறியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.3 அசோக் குமார் எனது மகன் அசோக் குமார் அடிப்பட்டு இறந்த விவரத்தை என்னிடம் எப்படி கூறினார் என்றால் நேரில் வந்து கூறினார். அ.சா.3 அசோக் குமார் மேற்கூறிய தகவலை சொல்லும் போது சம்பவ விவரங்களை கூறினார் என்றால் சரிதான். அ.சா.3 அசோக் குமார் மேற்கூறிய விவரத்தை எனது வீட்டில் வந்து சொல்லும் போது, எனது வீட்டில் நான் மற்றும் எனது மகன்கள் நவீன் குமார் மற்றும் கார்த்திக் இருந்தோம். எனது கணவர் அப்போது குளியல் அறையில் இருந்தார். எனது வீட்டிற்கும் சம்பவ இடமான புது சத்திரம் பேருந்து நிறுத்தத்திற்கும் இடையே 350 மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். நானும் எனது மகன்களான கார்த்திக் மற்றும் நவீன் குமார் ஆகியோர் சம்பவ இடத்திற்கு நடந்து சென்றோம். சம்பவ இடத்திற்கு நாங்கள் செல்லும் போது நேரம் இரவு 09.00 மணி இருக்கும். நான் அங்கு செல்லும் போது அங்கு கூட்டமாக இருந்தது. 20 – 30 பேர் இருந்திருப்பார்களா என்றால் எத்தனை பேர் என எனக்கு குறிப்பிட்டு தெரியாது. நான் சம்பவ இடத்தில் எனது மகன் அசோக்குமாரை தூக்கி மடி மேல் வைத்து முதலுதவி செய்தேனா என்றால் இல்லை. வேறு யாரும் எனது மகன் அசோக்குமாருக்கு முதலுதவி செய்து வந்தததை நான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் அங்கிருந்து போலீசாருக்கோ, ஆம்புலன்சுக்கோ தகவல் தெரிவித்தேனா என்றால் இல்லை. எனது மகன்களிடம் போலீசாருக்கு தகவல் கொடுக்கச்சொல்லி சொன்னேனா என்றால் இல்லை. எனது மகன் கார்த்திக்கின் காரில் அவர் ஓட்ட நாங்கள் எனது மகன் அசோக்குமாரை திருவள்ளூர் மருத்துவ மனைக்கு எடுத்து சென்றோம். எனது மகன் அசோக்குமாரை நான் என் மடி மீது வைத்து கொண்டு சென்றேன். அதன் காரணத்தினால் அவர் மீது இருந்த இரத்தக்கறை எனது துணியில் பட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த இரத்தக்கறை படிந்த துணியுடன் தான் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அங்கிருந்த காவல் அதிகாரி எனது உடையில் இரத்தக்கறை படிந்திருந்த விவரத்தை கேட்டு தெரிந்து கொண்டாரா என்றால் ஆம். எனது உடையை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் இீல்லை. இரவு சுமார் 10.00 மணியயவில் திருவள்ளூர் பொது மருத்துவ மனையை அடைந்திருப்போம். அங்கு மருத்துவரிடம், என்ன

நடந்தது என்ற விவரத்தை, எனது மகன் நவீன் குமார் தான் சொன்னார் என்றால் சரியல்ல. எனது மகன் கார்த்திக் கூறினார். அங்கு மருத்துவ மனையில் இருந்த புறக்காவல் நிலையத்தில் தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. வெள்ளவேடு காவல் நிலையத்திற்கு நேரடியாக சென்று புகார் கொடுத்தேன். வெள்ளவேடு காவல் நிலையத்திற்கு நான் செல்லும் போது நள்ளிரவு 12.00 – 12.30 இருக்கும். புகாரை எனது மூத்த கார்த்திக் எழுதி கொடுத்தார். நான் கையொப்பமிட்டு போலீசாரிடம் கொடுத்தேன். திருவள்ளூரிலிருந்து வெள்ளவேடு காவல் நிலையம் செல்வதற்கு சம்பவம் நடந்த இடத்தை தாண்டி தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தை பாதுகாப்பதற்காக போலீசார் அங்கு பந்தோபஸ்த் செய்திருந்தார்களா என்றால் நான் அதை கவனிக்கவில்லை. சம்பவம் நடந்த இடம் பூந்தமல்லியிலிருந்து திருவள்ளூர் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது என்றும் அந்த சாலையில் போக்குவரத்து அதிகமாக இருக்கம் என்றும் சொன்னால் சரிதான். மருத்துவ மனைக்கு சம்பவ இடத்திலிருந்து எனது மகன் அசோக்குமாரை எடுத்து செல்லும் போது, அ.சா,.3 அசோக்குமார் உடன் வந்தாரா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு செல்லும் போது அங்கு யார் யார் இருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. எனக்கு எழுத, படிக்க தெரியாது. அ.த,சா.1ல் தேதி 13.12.2020 என்றும், நேரம் 02.20 A.M என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நேரம் பதற்றத்தில் மாற்றிப் போடப்பட்டுள்ளது. இந்த விவரத்தை போலீசார் விசாரிக்கும் போது கூறினேனா என்றால் சொல்லவில்லை. முதல் விசாரணையிலும் இந்த விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கு பாதகமாக போய்விடும் என்பதால் பதற்றத்தில் போட்டுவிட்டதாக நான் தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இது குறித்து நானோ கார்த்திக்கோ காவல் ஆய்வாளருக்க கடிதம் ஏதேனும் கொடுத்தோமா என்றால் இீல்லை. சம்பவம் நடந்த அன்று இரவே போலீசார் என்னை எனது வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். எத்தனை முறை விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. 2–3 தடவை விசாரித்தார்களா என்றால் ஆம். பிரேத விசாரணை போலீசார் நடத்திய விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. புது சத்திரம் பகுதியில் 28 வருடமாக குடியிருந்து வருகிறேன். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகே சேட்டு என்பவர் புவனேஷ் பாஸ்ட் ப்ட் கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கடைக்கு மேற்கு பக்கத்தில் காலி இடமும் அதற்கு மேற்கு பக்கத்தில் ஒரு ஸ்வீட் கடை உள்ளது என்றால் சரிதான். அந்த ஸ்வீட் கடைக்கு மேற்கு பக்கத்தில் ஒரு தங்க நகை அடகு கடை உள்ளது என்றால் சரிதான். அந்த அடகு கடையில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு பக்கத்தில் சரவணா கூல் பார் என்ற கடை உள்ளது என்றால் சரிதான். அதற்கு கிழக்கு பக்கத்தில்

ஒரு சாலை செல்கிறது அதற்கு கிழக்கு பக்கத்தில் ஸ்ருதி ஸ்டியோ உள்ளது. அதற்கு கிழக்கு பக்கத்தில் தேவா டெய்லர் கடை உள்ளது. தேவா டெய்லர் கடை உள்ளே தேவி, ரேவதி மற்றும் ரமணி ஆகியோரின் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எதிரி சதீஷ் எனது வீட்டிற்கு வந்து எனது மகன் அசோக்குமாரை அழைத்து செ ன்ற போது நான், எனது மற்ற இரண்டு மகன்கள் கார்த்திக் மற்றும் நவீன் ஆகியோர் வீட்டில் இருந்த விவரத்தை போலீஸ் விசாணையிலும் புகாரிலும் கூறியுள்ளேனா என்றால் ஆம். " **சதீஷ் எங்களது சமூகத்தை சேர்ந்த சுவிதா என்ற பெண்ணை காதல் திருமணம் செய்து கொண்டார். சுவிதாவின் மாமனார் மாமியாருக்கும் சுவிதாவிற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது அதன் காரணமாக தற்கொலை செய்து கொண்டார். அதன் காரணமாக வழக்கு ஏற்பட்டு அதன் பேரில் சுவிதாவின் மாமனாரும் மாமியாரும் ஜெயிலில் இருந்தார்கள். சுவிதா எங்கள் சமூகத்தை சேர்ந்தவர் என்பதாகையால் அவரின் மாமனார் மாமியார் ஜெயிலுக்கு சென்றதற்கு எனது மகன் அசோக்குமாரும் காரணம் என்று சதீஷும் அவரது தந்தையான ராஜாவும் அவரது சகோதரரான முத்துவும் கருதிக்கொண்டார்கள்."** , என்று நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரத்தை போலஸ் விசாரணையிலும் புகாரிலும் கூறியுள்ளேனா என்றால் ஆம். " **மதகன் மகன் அசோகா என்பவர் எனது வீட்டிற்கு ஓடி வந்து, புதுசத்திரத்திலிருந்து பூந்தமல்லி செல்லும் சாலையில் அமைந்துள்ள புதுசத்திரம் பேருந்து நிறுத்தத்தில் எனது மகன் அசோக்குமாருக்கு காயங்கள் பட்டு இரத்தம் கொட்டுகிறது என்று கூறினார். உடனே நான் எனது மற்ற மகன்களான கார்த்திக் மற்றும் நவீன் ஆகியோர் அங்கு சென்று பார்த்தோம்** " என்று நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரத்தை போலஸ் விசாரணையிலும் புகாரிலும் கூறியுள்ளேனா என்றால் ஆம். மேலும் சம்பவ இடத்தில் அசோக் குமார் இடது வயிற்றுக்கு மேல் கத்தியால் குத்தப்பட்டு கிடந்தார் என்பதை எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம். " **அவரது உடம்பிலிருந்து இரத்தமாக போய் கொண்டிருந்தது. நான் எப்படி எனது மகனுக்கு அவ்வாறு ஏற்பட்டது என்று கத்தி கேட்ட போது அசோகா, எனது மகன் அசோக்குமாரை ராஜா, முத்து மற்றும் சதீஷ் ஆகியோர் கத்தியால் குத்திவிட்டதாக கூறினார்** " என்று போலீஸ் விசாரணையிலும்

புகாரிலும் கூறியுள்ளேனா என்றால் ஆம். எனது மகள் அசோக்குமார் சாராய வழக்கில் செவ்வாய்பேட்டை காவல் நிலையத்தில் கைது செய்யப்பட்டிருந்தார் என்றால் சரிதான். எனது மகன் அசோக்குமார் விஜய் மக்கள் இயக்கத்தின் அந்த ஊருக்கு தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அந்த இயக்கத்தில் மதகன் மகன் அசோக்குமார் மற்றும் ஜெகன் ஆகியோர் உறுப்பினர்கள் என்றால் சரிதான். அவரின் பிறந்த நாளுடக்கு கடைக கடையாக சென்று வசூல் செய்து விழா நடத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது ஊிரில் ரஜினி டீ கடை உள்ளது அதன் உரிமையாளர் ரஜினி எ ன்பவர் உரிமையாளர் அதில் ஐயப்பன் என்பவர் டீ மாஸ்டராக இருந்தார் என்றும் சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது. அந்த கடையிலிருந்து  பிறந்த நாள் விழாவிற்க பணம் கொடுக்கவில்லை என்று ஐயப்பனை எனது மகன் அசோக்குமார் ஸ்பேனரை வைத்து அடித்து அவர் மண்டயையை உடைத்துவிட்டார் என்றால் சரியல்ல. முதலாம் எதிரி ராஜா அனுராதா பாஸ்ட் புட் என்ற கடை வைத்து நடத்தி வந்தார் என்றால் சரிதான். அந்த ராஜா, எனது மகன் அசோக்குமார், அ.சா.3 அசோக்குமார் மற்றும் ஜெகன் ஆகியோர் பணம் கேட்டு கொடுக்காததினால், மற்றவர்களும் கொடுக்கமாட்டார்கள் என்பதால் அவர் மீது அவர்கள் வன்மம் கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. அந்த வன்மத்தின் காரணமாக அ.சா.3 அசோக்குமார் மற்றம் ஜெகன் ஆகியோர் கேட்டுக்கொண்டதன் பேரில் எதிரிக்ள் மூவரையும் இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.